ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 09.08.2016

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2016 மே

### பொதுநோக்கு

விரிவடைகின்ற வர்த்தகப் பற்றாக்குறை, சுற்றுலா வருவாய்களில் ஏற்பட்டு வரும் தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களில் காணப்பட்ட அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக இலங்கையின் வெளிநாட்டுத் துறை 2016 மேயில் கலப்பான செயலாற்றமொன்றினைக் காட்டியது. ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், இறக்குமதிச் செலவினத்தில் சிறிதளவு அதிகரிப்புக் காணப்பட்ட போதும் தேயிலை, இறப்பர் உற்பத்திகள், புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிச் செயலாற்றத்தில் காணப்பட்ட குறைவின் முக்கிய காரணமாக ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாக வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைந்தது. எனினும், 2016 மே இறுதியிலுள்ளவாறு ஒன்றுசேர்ந்த அடிப்படையில் வர்த்தகப் பற்றாக்குறையின் விரிவானது சுற்றுலாவின் பேரிலான தொடர்ச்சியான உட்பாய்ச்சல்கள், அதிகரித்த தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் இக்காலப்பகுதியில் நிதியியல் கணக்கிற்கான மிதமான உட்பாய்ச்சல் என்பனவற்றின் காரணமாக ஓரளவிற்கு எதிரீடு செய்யப்பட்டது.

### ஏற்றுமதிச் செயலாற்றம்

2016 மேயில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், 2015 மேயில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 883 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 776 மில்லியனுக்கு 12.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து ஏற்றுமதிகளின் அனைத்து முக்கிய வகைகளிலும் ஏற்பட்ட சுருக்கத்தினைப் பிரதிபலித்தது. தேயிலை ஏற்றுமதிகள், இறப்பர் உற்பத்திகள், புடவை மற்றும் ஆடைகள் என்பனவற்றின் குறைந்த செயலாற்றம் ஏற்றுமதி வருவாய்களின் ஒட்டுமொத்த வீழ்ச்சிக்குப் பங்களித்தன. 2016 மேயில் தேயிலையிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் கணிசமானளவிற்கு வீழ்ச்சியடைந்து சராசரி தேயிலை விலைகள் மற்றும் ஏற்றுமதி அளவு ஆகிய இரண்டிலும் ஏற்பட்ட வீழ்ச்சியைப் பிரதிபலித்தது.

தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலைகள் கி.கிறாமொன்றிற்கு ஐ.அ.டொலர் 4.24 சதவீதத்திற்கு 5.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு மத்திய கிழக்கு மற்றும் ருஷியாவிலிருந்தான குறைந்த கேள்வியின் காரணமாக விளங்கிய வேளையில் ஏற்றுமதி அளவும் 21.26 மில்லியன் கி.கிறாம்களுக்கு 23.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இம்மாத காலப்பகுதியில் இறப்பர் உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்து இதன் அனைத்துத் துணை வகைகளிலும் குறிப்பாக, இறப்பர் டயர்கள், சத்திரசிகிச்சை மற்றும் ஏனைய கையுறைகள் என்பனவற்றில் ஏற்பட்ட வீழ்ச்சியை எடுத்துக்காட்டின. கடந்த ஒரு சில மாதங்களாக சிறந்த செயலாற்றத்தினைக் காட்டிய இலங்கையின் முக்கிய ஏற்றுமதி உற்பத்திகளான புடவைகள் மற்றும் ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களும் 2016 மேயில் வீழ்ச்சியடைந்து பாரம்பரிய மற்றும் பாரம்பரியமற்ற சந்தைகளுக்கான குறைந்த ஆடை ஏற்றுமதிகளைப் பிரதிபலித்தன. எனினும், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், பிளாத்திக்கு மற்றும் அதிலிருந்து தயாரிக்கப்பட்ட பொருட்கள், போக்குவரத்துச் சாதனங்கள், இறப்பர் மற்றும் தயாரிக்கப்படாத புகையிலை ஏற்றுமதிகள் என்பனவற்றிலிருந்தான வருவாய்கள் 2015 மேயுடன் ஒப்பிடுகையில் 2016 மேயில் ஓரளவு முன்னேற்றத்தினைக் காட்டின.

2016இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் ஏற்றுமதிகளிலிருந்தான ஒன்றுசேர்ந்த வருவாய்கள், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஐ.அ.டொலர் 4,211 மில்லியனுக்கு 6.0 சதவீதத்தினால் சுருக்கமடைந்தமைக்கு போக்குவரத்துக் கருவிகள், பெற்றோலிய உற்பத்திகள், தேயிலை மற்றும் வாசனைத்திரவியங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட குறைப்பே பெருமளவிற்குக் காரணமாகும். 2016இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் இலங்கையின் வணிக ஏற்றுமதிகளுக்கான முன்னணிச் சந்தைகளாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, ஜேர்மனி மற்றும் இத்தாலி என்பன விளங்கி மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 54 சதவீதத்திற்கு வகைகூறின.

அட்டவணை 1: ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள்

| வகை | மே 2015 (ஐ.அ.டொ மில்) | மே 2016 (ஐ.அ.டொ மில்) | மாற்றம் (%) | சனவரி - மே 2015 (ஐ.அ.டொ மில்) | சனவரி - மே 2016 (ஐ.அ.டொ மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **661.3** | **604.2** | **(8.6)** | **3,440.5** | **3,302.7** | **(4.0)** |
| இறப்பர் உற்பத்திகள் | 76.2 | 57.1 | (25.1) | 332.5 | 308.7 | (7.1) |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 392.9 | 374.7 | (4.6) | 1,981.0 | 2,084.5 | 5.2 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 25.2 | 16.9 | (33.2) | 175.8 | 109.2 | (37.9) |
| அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் | 5.7 | 1.5 | (73.0) | 17.4 | 8.1 | (53.6) |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பகுதிகள் | 5.5 | 5.4 | (3.5) | 25.8 | 29.2 | 13.3 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பகுதிகள் | 4.8 | 5.4 | 11.4 | 26.6 | 29.2 | 10.0 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 6.4 | 7.0 | 10.1 | 178.0 | 59.5 | (66.5) |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 24.6 | 27.7 | 12.9 | 156.4 | 126.5 | (19.1) |
| ஏனையவை | 119.9 | 108.5 | (9.5) | 547.1 | 547.8 | 0.1 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **217.0** | **168.7** | **(22.2)** | **1,018.0** | **890.5** | **(12.5)** |
| தேயிலை | 123.6 | 90.2 | (27.1) | 561.0 | 496.5 | (11.5) |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 16.0 | 10.8 | (32.8) | 71.5 | 46.9 | (34.5) |
| தேங்காய் | 32.9 | 27.9 | (15.0) | 142.3 | 142.7 | 0.3 |
| கடலுணவு | 14.9 | 12.6 | (15.3) | 72.3 | 70.5 | (2.5) |
| வாசனைத்திரவியம் | 21.4 | 19.4 | (9.0) | 130.8 | 93.4 | (28.6) |
| இறப்பர் | 2.2 | 2.5 | 14.4 | 11.9 | 15.1 | 26.7 |
| ஏனையவை | 6.0 | 5.3 | (11.6) | 28.1 | 25.4 | (9.6) |
| **3. கனிமங்கள் மற்றும் ஏனையவை** | **4.3** | **3.4** | **(21.3)** | **21.8** | **17.7** | **(18.7)** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **882.5** | **776.3** | **(12.0)** | **4,480.3** | **4,210.9** | **(6.0)** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
இலங்கை மத்திய வங்கி

## இறக்குமதிச் செயலாற்றம்

கடந்த பத்து மாத காலப்குதியில் நிலவிய ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கிற்கு மாறாக, 2016 மேயில் இறக்குமதிகள் மீதான செலவினம் 2015 மேயின் ஐ.அ.டொலர் 1,585 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,590 மில்லியனுக்கு 0.3 சதவீதத்தினால் சிறிதளவால் வளர்ச்சியடைந்தது. இவ்வளர்ச்சிக்கு, நுகர்வுப்பொருட்கள் மற்றும் இடைநிலைப்பொருட்களின் இறக்குமதிகளில் வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டமைக்கிடையிலும் முதலீட்டுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினத்தில் பதிவு செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பே பெருமளவிற்குப் பங்களித்தது. பொறிகள் மற்றும் கருவிகள், கட்டட மூலப்பொருட்கள் என்பன மீதான இறக்குமதிச் செலவினம் 2016 மேயில் கணிசமாக அதிகரித்து

பெரும்பாலும் அனைத்துத் துணை வகைகளிலும் ஏற்பட்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. மேலும், புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் இம்மாத காலப்பகுதியில் அதிகரித்தமைக்கு துணி மற்றும் கண்ணாடி இழைகளின் இறக்குமதிகளில் பதிவுசெய்யப்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியே முக்கிய காரணமாகும். மேலும், 2016 மேயில் தங்க இறக்குமதிகள் மீதான செலவினம் கணிசமாக அதிரித்தது. அத்துடன் இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் மற்றும் இரசாயன உற்பத்திகள் மீதான இறக்குமதிச் செலவினம் இம்மாத காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன. எனினும், நிலக்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் அளவில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக் காணப்பட்ட போதும் 2016 மேயில், எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் கணிசமாக வீழ்ச்சியடைந்தமைக்கு மசகெண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் நிலக்கரி என்பனவற்றின் சராசரி இறக்குமதி விலைகளில் பதிவுசெய்யப்பட்ட கணிசமான வீழ்ச்சி காரணமாக இருந்தது. 2016 மேயில் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 48.84 ஆகக் காணப்பட்ட மசகெண்ணெயின் சராசரி இறக்குமதி விலை 2015 மேயில் பதிவுசெய்யப்பட்ட பீப்பாய் ஒன்றிற்கான ஐ.அ.டொர் 63.09 உடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்த போதும் 2016 ஏப்பிறலின் பீப்பாய் ஒன்றிற்கான ஐ.அ.டொலர் 44.05 உடன் ஒப்பிடுகையில் இது அதிகரித்து பன்னாட்டுச் சந்தையில் மசகெண்ணயின் விலைகள் அதிகரித்தமையினைப் பிரதிபலித்தன. அதேவேளை, 2016 வரவு செலவுத்திட்டத்திலிருந்து ஊர்தி இறக்குமதிகளுக்கான வரி அதிகரிப்புக்களின் தாக்கத்தை முக்கியமாகப் பிரதிபலிக்கின்ற விதத்தில் தனியாள் உந்து ஊர்திகள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள், நுகர்வுப்பொருட்கள் மற்றும் முதலீட்டுப்பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டவைகள் என்பன மீதான இறக்குமதிச் செலவினம் பெருமளவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு உந்து ஊர்திகள், கலப்பு மின்னியல் ஊர்திகள் மற்றும் வீதி ஊர்திகள் குறிப்பாக முச்சில்லு வண்டிகள் மற்றும் வர்த்தக நோக்கங்களுக்கான வாடகை ஊர்திகள் என்பனவற்றில் பதிவுசெய்யப்பட்ட கணிசமான வீழ்ச்சிகளே காரணங்களாக அமைந்தன. மேலும், அடிப்படை உலோகங்கள், அரிசி மற்றும் கனிப்பொருள் உற்பத்திகள் என்பன மீதான இறக்குமதிச் செலவினமும் 2016 மேயில் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது.

ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 2016இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 7,645 மில்லியனுக்கு 2.8 சதவீதத்தினால் சுருக்கமடைந்தமைக்கு எரிபொருள், போக்குவரத்துச் சாதனங்கள் மற்றும் அரிசி இறக்குமதிகளில் பதிவுசெய்யப்பட்ட வீழ்ச்சிகளே முக்கிய காரணங்களாக அமைந்தன. 2016இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் முக்கிய இறக்குமதி நாடுகளாக சீனா, இந்தியா, யப்பான், சிங்கப்பூர் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் என்பன விளங்கி மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 56 சதவீதத்திற்கு வகைகூறின.

### அட்டவணை 2 - இறக்குமதிகள் மீதான செலவினம்

| வகை | மே 2015 (ஐ.அ.டொ மில்) | மே 2016 (ஐ.அ.டொ மில்) | மாற்றம் (%) | சனவரி - மே 2015 (ஐ.அ.டொ மில்) | சனவரி - மே 2016 (ஐ.அ.டொ மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **348.8** | **328.1** | **(5.9)** | **1,916.1** | **1,753.6** | **(8.5)** |
| உணவு மற்றும் குடிபானங்கள் | 131.9 | 121.5 | (7.9) | 743.8 | 638.3 | (14.2) |
| பால் உற்பத்திகள் | 16.0 | 23.0 | 43.7 | 96.6 | 97.1 | 0.5 |
| கடலுணவு | 15.2 | 20.6 | 35.4 | 73.1 | 98.7 | 35.0 |
| சீனி மற்றும் இனிப்புப் பொருட்கள் | 17.4 | 14.3 | (17.8) | 123.2 | 108.7 | (11.8) |
| தானியங்கள் மற்றும் ஆலைக்கைத்தொழில் உற்பத்திகள் | 20.5 | 2.3 | (88.8) | 128.7 | 9.2 | (92.8) |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 62.8 | 61.3 | (2.5) | 322.2 | 324.7 | 0.8 |
| உணவல்லாத நுகர்வுப் பொருட்கள் | 216.8 | 206.7 | (4.7) | 1,172.3 | 1,115.3 | (4.9) |
| வாகனங்கள் | 93.0 | 63.5 | (31.7) | 477.9 | 362.4 | (24.2) |
| வீட்டுச் சாதனங்கள் | 12.3 | 20.1 | 62.8 | 86.8 | 113.5 | 30.9 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவை | 111.5 | 123.0 | 10.3 | 607.6 | 639.4 | 5.2 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **889.2** | **851.4** | **(4.2)** | **4,042.3** | **3,870.7** | **(4.2)** |
| புடவைகள் மற்றும் ஆடைப் பொருட்கள் | 205.2 | 234.6 | 14.3 | 974.1 | 1,131.3 | 16.1 |
| எரிபொருள் | 264.3 | 187.1 | (29.2) | 1,186.0 | 873.6 | (26.3) |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 19.7 | 49.0 | 148.5 | 101.1 | 168.8 | 66.9 |
| இறப்பர் மற்றும் அது தொடர்பான பொருட்கள் | 18.8 | 43.6 | 131.9 | 97.7 | 123.3 | 26.2 |
| அடிப்படை உலோகங்கள் | 49.3 | 28.3 | (42.7) | 210.2 | 133.7 | (36.4) |
| ஏனையவை | 331.8 | 308.9 | (6.9) | 1,473.0 | 1,439.9 | (2.2) |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **345.8** | **408.8** | **18.2** | **1,900.7** | **2,016.7** | **6.1** |
| பொறி மற்றும் கருவிகள் | 174.1 | 222.0 | 27.5 | 950.1 | 1,147.2 | 20.8 |
| கட்டடப் பொருட்கள் | 100.0 | 137.5 | 37.5 | 509.0 | 622.8 | 22.4 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 71.6 | 49.0 | (31.5) | 439.5 | 244.1 | (44.5) |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 0.1 | 0.3 | 123.6 | 2.1 | 2.6 | 19.3 |
| **4. வகைப்படுத்தப்படாதவை** | **1.6** | **1.4** | **(12.7)** | **9.0** | **4.3** | **(52.6)** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,585.5** | **1,589.8** | **0.3** | **7,868.0** | **7,645.2** | **(2.8)** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி
இலங்கை மத்திய வங்கி

### வரைபடம் 1: ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் செயலாற்றம்







மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி.
இலங்கைச் சுங்கம்,

**வர்த்தக மீதி**

2016 மேயில் வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை 2015 மேயின் ஐ.அ.டொலர் 703 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 814 மில்லியனுக்கு விரிவடைந்தது. மேலும், 2016இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த வர்த்தகப் பற்றாக்குறையும் 2015இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 3,388 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 3,434 மில்லியனுக்கு அதிகரித்தது.

**சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்**

2016 யூனில் 118,038 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்ததன் மூலம் சுற்றுலா வருகைகள் இம்மாத காலப்பகுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2.2 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியைப் பதிவுசெய்தது. ருஷியா, பெல்ஜியம், நோர்வே மற்றும் மாலைதீவு ஆகியவற்றிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி இக்குறைந்த வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்தது. எனினும், 2016இன் முதல் ஆறு மாத காலப்பகுதியின் ஒன்றுசேர்ந்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2015இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 964,267 இற்கு 16.2 சதவீதத்தினால் அதிகரித்தன. 2016 யூன் வரை சுற்றுலாப் பயணிகளின் முதல் ஐந்து மூலங்களாக இந்தியா, சீனா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் என்பன விளங்கி இக்காலப்பகுதியில் வருகை தந்த மொத்தச் சுற்றுலாப் பயணிகளில் 52.6 சதவீதத்திற்கு வகைகூறின. 2016இன் முதல் ஆறு மாத காலப்பகுதியில் சுற்றுலாவிலிருந்தான[1] ஒன்றுசேர்ந்த வருவாய்கள் 2015இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,375.7 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,598.2 மில்லியனுக்கு அதிகரித்தன.

---

[1] இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபை அதன் சராசரித் தங்கியிருக்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரிச் செலவு தொடர்பான 2016ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் பற்றிய அளவீட்டினை வெளியிட்டதும் இத்தற்காலிக மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்படும்.

**தொழிலாளர் பணவனுப்பல்கள்**

2016 மேயில் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்தான பெறுகைகள் ஐ.அ.டொலர் 597.2 மில்லியனாக விளங்கி முன்னைய மாதத்தில் பதிவுசெய்யப்பட்ட 1.4 சதவீதம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 11.1 சதவீதத்தினால் அதிகரித்தன. இதற்கமைய, 2016இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்தான ஒன்றுசேர்ந்த உட்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 2,968.6 மில்லியனாக விளங்கி 2015இன் தொடர்பான காலப்பகுதியினை விட 5.9 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது.

**நிதியியல் பாய்ச்சல்கள்**

ஆண்டின் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் வெளிநாட்டு முதலீடுகள் ஐ.அ.டொலர் 37.3 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்து இரண்டாந்தரச் சந்தையிலிருந்தான ஐ.அ.டொலர் 38.6 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலையும் முதலாந்தரச் சந்தைக்கான ஐ.அ.டொலர் 1.3 மில்லியன் கொண்ட உட்பாய்ச்சலையும் உள்ளடக்கியிருந்தது. 2016இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தை 2015இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 61.7 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 442.8 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றைப் பதிவுசெய்தது. 2016இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் அரசிற்கான நீண்ட காலக் கடன்கள் 2015இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 82.6 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 20.1 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றைப் பதிவுசெய்தது.

**திரண்ட சென்மதி நிலுவை நிலைமை**

2016இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் திரண்ட சென்மதி நிலுவை நிலைமை 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,307.4 மில்லியன் கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,142.3 மில்லியன் கொண்ட பற்றாக்குறையொன்றினை பதிவுசெய்யப்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டது.

**பன்னாட்டு ஒதுக்குகளும் செலாவணி வீத அசைவுகளும்**

2016 மே இறுதியில் இலங்கையின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 5.6 மில்லியனாக விளங்கி 3.6 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாக விளங்கிய வேளையில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 7.7 பில்லியனாக விளங்கி 4.9 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டது.

2015 இறுதியிலிருந்து 2016 ஓகத்து 8ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக ரூபா 1.1 சதவீதம் கொண்ட மிதமான தேய்வொன்றினைப் பதிவுசெய்தது. மேலும், குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் ரூபா, யூரோவிற்கெதிராக 2.6 சதவீதத்தினாலும் யப்பானிய யென்னுக்கெதிராக 16.2 சதவீதத்தினாலும் கனடிய டொலருக்கெதிராக 6.0 சதவீதத்தினாலும் அவுஸ்திரேலியா டொலருக்கெதிராக 5.2 சதவீதத்தினாலும் இந்திய

ரூபாவிற்கெதிராக 0.6 சதவீதத்தினாலும் தேய்வடைந்த வேளையில், ஸ்டேர்லிங் பவுணுக்கெதிராக 12.1 சதவீதத்தினால் உயர்வடைந்தது.

### அட்டவணை 3: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு (அ)

| வகை | மே 2015 ஐ.அ.டொ. மில் | மே 2016 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சனவரி - மே 2015 ஐ.அ.டொ.மில் | சனவரி - மே 2016 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 882.5 | 776.3 | -12 | 4,480.30 | 4,210.90 | -6 |
| இறக்குமதிகள் | 1,585.50 | 1,589.80 | 0.3 | 7,868.00 | 7,645.20 | -2.8 |
| வர்த்தக மீதி (மிகை (+) குறை (-)) | -702.9 | -813.5 | 15.7 | -3,387.70 | -3,434.30 | 1.4 |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 188.2(ஆ) | 207.2 | 10.1 | 1,184.4(ஆ) | 1,402.50 | 18.4 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 537.7 | 597.2 | 11.1 | 2,803.10 | 2,968.6(ஆ) | 5.9 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (இ) | 13.3 | -17.8 | -233.8 | 58.2 | -37.3 | -164.1 |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (ஈ) | 96 | 290.8 | 202.9 | 976.3 | 814.5 | -16.6 |
| இதில், | | | | | | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 10.1 | 189.7 | 1,769.50 | 526.1 | 407.4 | -22.6 |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | - | - | - | - | - | - |
| நீண்ட காலக் கடன்கள் | 79 | 100.6 | 27.3 | 406 | 396.5 | -2.3 |
| வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (உ) | - | - | - | 346.4 | 164.5 | -52.5 |

மூலங்கள்: இலங்கை முதலீட்டுச் சபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

(அ) தற்காலிகமானது.

(ஆ) திருத்தப்பட்டது.

(இ) இரண்டாந்தரம் மற்றும் முதனிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஈ) அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல்கள், அரசாங்கத்திற்கான மூலதனம் மற்றும் நடைமுறை மாற்றல்கள், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் என்பனவற்றின் விற்பனையிலிருந்தான உட்பாய்ச்சல்கள் மற்றும் அரசாங்கத்தின் நீண்ட காலக் கடன்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

(உ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் மூன்று மாதங்களுக்கான கிடைக்கத்தக்க தரவுகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் உள்ளடக்குகிறது.